# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2013

PW1–சுரேஷ்குமார் நாள்:24.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் BSc படித்துள்ளேன். என் அம்மா பெயர் நாச்சார்அம்மாள். நாச்சாரு என்று சொன்னால் தவறு. என் பாட்டி பாக்கியத்தம்மாளின் கணவர் பெயர் ரத்தினபிள்ளை. தாவா சொத்தை 1930ம் ஆண்டு மாரியம்மாள் வாங்கினார். அவர் என்அம்மாவின் பாட்டியாவர். மாரிம்மாளின் சொந்த ஊர் குளித்தலை ஆகும். அவர் எந்த வருடம் இறந்தார் என்று தெரியாது. அவருக்கு 3 குழந்தைகள் ஆகும். அவர்கள் பாக்கியத்தம்மாள், அங்கமுத்து, மயில்பிள்ளை ஆகியோார்கள் ஆவார்கள். பாக்கியத்தம்மாள் மூத்தவர் ஆவார். பாக்கியத்தம்மாளுக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. பாக்கியத்தமாளின் கணவர் பெயர் ரத்தினம்பிள்ளை ஆகும். அவர் இறந்துவிட்டார். அவர் இறந்த வருடம் தெரியாது. பாக்கியத்தம்மாளுக்கு 6 குழந்கைள் உண்டு. அவர்கள் நாச்சாரம்மாள், ராசப்பா, சுப்ரமணி, சக்குபாய், சேகர், செல்வி ஆகியோர்கள் ஆவார்கள். வா.சா.ஆ.1 வம்சாவளி பட்டியலில் ராசப்பா பெயரை முதலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு என்அம்மா நாச்சாரம்மாளும், மீதி 5 பேர்களும் சேர்ந்து தாக்கல் செய்தார்கள். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு என்அம்மா விவரம் சொன்னார். என்மாமா ராசப்பா 6 மாதத்திற்கு முன்பு இறந்தார். ராசப்பாக்கு ஒரு மகன். அவர் பெயர் ரத்தினகுமார். ராசப்பாவுக்கு சாந்தி என்ற மகள் கிடையாது. பரிமளம் என்ற பெயரில் மகன் கிடையாது. சாந்தி மற்றும் பரிமளம் ஆகியோர்கள் சுப்ரமணியத்தின் அக்கா வாரிசு ஆவார்கள். நாச்சாரம்மாளின் மாமா பெயர் அங்கமுத்து, மயில்பிள்ளை என்றால் சரிதான். அங்கமுத்து இறந்துவிட்டார். அவருக்கு இரண்டு பெண், ஒரு மகன் உண்டு. அங்கமுத்துவிற்கு ஒரு மகன் இருப்பதாக வா.சா.ஆ.1 வம்சாவளி பட்டியலில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பொம்மனம்மாள் அங்கமுத்துவின் மனைவி ஆவார். அங்கமுத்துவின் இரண்டு மகள்களை வா.சா.ஆ.1ல் காட்டவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு கேட்டுக்கொண்டதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.